


# 30.06.2026 செய்திகள்

## 1994-ஆம் ஆண்டின் யமுனை நதி ஒப்பந்தம்

- ஹரியானாவின் யமுனை நகர் மாவட்டத்தில் பாயும் யமுனை நதியில் உள்ள ஹாதினி குன்ட் தடுப்பணையில் இருந்து ராஜஸ்தானுக்கு நீர் கிடைக்கும் நோக்கில், 1994-ஆம் ஆண்டு மேல் யமுனை நதி வாரிய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.
- ஆனால் ராஜஸ்தானுக்கு நீரை விநியோகிக்க கால்வாய் அமைப்பு இல்லாததால், அந்த ஒப்பந்தத்தை அமல்படுத்த முடியாமல் போனது.
- மழைக்காலங்களில் ஹாதினி குன்ட் தடுப்பணையில் இருந்து நிலத்தடி குழாய் அமைப்பு மூலம், தனக்குரிய யமுனை நதிநீரை ராஜஸ்தான் பெறும்.
- இந்த நடவடிக்கை அந்த மாநிலத்தின் மிகவும் வறண்ட பகுதிகளில் சமூக-பொருளாதார மேம்பாட்டுக்கு உதவுவதுடன், குடிநீர் விநியோகத்தை உறுதி செய்யும். இதனால் லட்சக்கணக்கான மக்கள் பயனடைவர்.

## இயற்கை எச்சரிக்கிறது!

» வெனிசுலா பசிபிக் நெருப்பு வளையம்

- பசிபிக் நெருப்பு வளையம் (பசிபிக் ரிங் ஆஃப் ஃபயர்) என்று அழைக்கப்படும் உலகின் முக்கியமான நிலநடுக்கப் பகுதியில் அமைந்திருக்கும் நாடுகள் ஜப்பானும், இந்தோனேசியாவும், ஜப்பான், சீனா உள்ளிட்ட நாடுகள் நிலநடுக்கத்துக்குப் பழக்கப்பட்டிருப்பதால், அதை எதிர்கொள்ளும் விதத்திலான கட்டமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட முன்னெச்சரிக்கை எதுவும் இல்லாத நாடு.
- தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் கடந்த ஜுன் 24-ஆம் தேதி அடுத்தடுத்து ஏற்பட்ட இரு சக்திவாய்ந்த நிலநடுக்கங்களால் 1,400-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தது உலகையே பெரும் துயருக்குள்ளாக்கியிருக்கிறது.
- ரிக்டர் அளவுகோலில் 7.2 மற்றும் 7.5 அலகுகளாகப் பதிவான இந்த நிலநடுக்கங்களில் 3,000-க்கும் மேற்பட்டோர் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர். நிலநடுக்கங்களில் சிக்கி காணாமல் போன 51,000-க்கும் மேற்பட்டோர் நிலை குறித்த அச்சம் எழுந்துள்ளது.

» வெனிசுலா மருத்துவமனை

- தலைநகர் கராகஸ் உள்பட பல பகுதிகள் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டிருந்தாலும் லா குவாரியா நகரத்தில்தான் மிக அதிக பாதிப்பு, நிலநடுக்கத்துக்கு இரண்டு நாள்கள் கழித்து போர்த்துகீசா மாகாணத்தில் பலத்த மழையால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது.

- பொது மருத்துவமனைகள் ஏன் தரம் உயர்த்தப்பட்ட நிலையில் தயாராக இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது வெனிசுலா நிலநடுக்கம்.

- மருத்துவர்களில் 30%, செவிலியர்களில் 70% கடந்த பத்தாண்டுகளில் வெளிநாடுகளுக்குக் குடிபெயர்ந்து விட்டனர். பொது மருத்துவமனைகளில் போதுமான படுக்கை வசதிகளோ, அவசரமான சிகிச்சைக்கான மருந்துகள், பேண்டேஜ்கள் உள்ளிட்டவையோ, இல்லாத நிலைமை. கதிரியிக்க கருவிகளும், ஏனைய மருத்துவ வாகனங்களும் மிகவும் பழைமையானவை என்பதுடன் செயலிழந்த நிலையில் இருக்கின்றன.

- ஆபரேஷன் அமிஸ்டாட் என்ற பெயரில் இந்திய விமானப் படையின் இரண்டு சி-17 விமானங்களில் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் உள்பட 35 டன் நிவாரணப் பொருள்களுடன் 41 பேர் கொண்ட மீட்புக் குழுவினர் வெனிசுலா சென்றடைந்துள்ளனர்.

- பூமியின் மேற்பரப்பு டெக்டோனிக் பிளேட் எனப்படும் பாறைகளால் ஆன பல தட்டுகளால் பிரிக்கப்பட்டுள்ளது. இந்தத் தட்டுகள் நகரும்போது அவற்றின் எல்லைகள் ஒன்றோடொன்று உரசுகின்றன.

- இதன் தொடர்ச்சியான விளைவுகளால்தான் நிலநடுக்கம் ஏற்படுகிறது. இப்போது கூகுள் ஒரு புதிய தொழில்நுட்பத்தின் மூலம் நிலநடுக்கம் ஏற்படுவதைக் கண்டறிந்து எச்சரிக்க முடியும் என்பதை வெனிசுலா நிலநடுக்கத்தில் உறுதிப்படுத்தி இருக்கிறது.

- கூகுளின் நிலநடுக்க எச்சரிக்கை (ஏர்த் குவேக் அலர்ட் சிஸ்டம்), வெனிசுலாவில் நிலநடுக்கம் ஏற்படுவதற்கு சில விநாடிகள் முன்பாக ஏறத்தாழ 1.14 கோடி பயனாளிகளை எச்சரிக்கை செய்தது. நிலநடுக்க அதிர்வுகள் பூமியில் தொடங்கும்போது ஆண்ட்ராய்ட் கைப்பேசிகள் அந்த அதிர்வலைகளை உள்வாங்கி, கூகுள் சர்வர்களுக்கு அனுப்புகின்றன.

- அந்தத் தகவலின் அடிப்படையில் சர்வர்கள் நிலநடுக்கத்தின் இயல்பையும், வலிமையையும் கணித்து கைப்பேசிகளுக்கு எச்சரிக்கை செய்தி அனுப்பியிருக்கின்றன.

- ஆண்ட்ராய்ட் கைப்பேசிகளில் அந்த அதிர்வலைகளை உள்வாங்கி, கூகுள் சர்வர்களுக்கு அனுப்புகின்றன. அந்தத் தகவலின் அடிப்படையில் சர்வர்கள் நிலநடுக்கத்தின் இயல்பையும், வலிமையையும் கணித்து கைப்பேசிகளுக்கு எச்சரிக்கை செய்தி அனுப்பியிருக்கின்றன.

- ஆண்ட்ராய்ட் கைப்பேசிகளில் இந்த வசதி ஏறத்தாழ 100 நாடுகளில் இணைக்கப்பட்டிருப்பதாக கூகுள் தெரிவிக்கிறது.

SURESH'